# தளிர்

## மிட்ஸ் தளிர்கள் உலகம்

(குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி திட்டம்)

மார்த்தாண்டம் மறைமாவட்டம்

தொடர்பு இதழ் – டிசம்பர் – 2017 (தனிசுற்றுக்கு மட்டும்)

## நற்பண்புகளை வளர்ப்போம்! நல்லதோர் சமுதாயத்தை உருவாக்குவோம்......

அன்பு குழந்தைகளே, மனித வாழ்வானது குடும்பத்தில் அரும்பாகி, சமூகத்தில் மலர்ந்து உலகில் மணம் வீசுகிறது. இத்தகைய குடும்பத்தின் மொட்டுகளாக அரும்பியிருக்கும் நீங்கள் குட்டி திருச்சபையாகிய குடும்பத்திலிருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. மனித மதிப்புகள், மனித உறவுகள், அறநெறி கோட்பாடுகள், ஆன்மீக வழிமுறைகள், பழக்கவழக்கங்கள், துன்ப துயரங்கள், மகிழ்ச்சி மனநிறைவுகள், வாழ்வின் அர்த்தங்கள் என்று அனைத்தையும் முதன் முதலில் அறிமுகம் செய்யும் வாழ்வின் கலைக்கூடம் தான் குடும்பம். இன்று பல குடும்பங்களில் இத்தகைய பண்புகள் பின்பற்றபடாமல் சிறு வயதிலேயே குழந்தைகள் திசை மாறி செல்லுகின்ற நிலையை காண்கிறோம். இதற்கு முக்கிய காரணம் பிறரன்பு மற்றும் மன்னிக்கும் மனப்பான்மை இல்லாமையே ஆகும். இரு நண்பர்கள் பாலைவனம் வழி நடந்து சென்று கொண்டிருந்தனர். இருவருக்கும் ஒரு விஷயம் குறித்து வாக்குவாதம் ஏற்பட்டது. கோபத்தில் ஒரு நண்பன் மற்ற நண்பனை கன்னத்தில் அறைந்து விட்டான். அறை வாங்கிய நண்பன் எதுவும் பேசாமல் மணலில் அமர்ந்து கொண்டு "என் நண்பன் இன்று என்னை கன்னத்தில் அறைந்து விட்டான்" என்று மணலில் எழுதினான். தொடர்ந்து நடந்த அவர்கள் ஒரு நீரூற்றை கண்டபோது இருவரும் அதில் குளித்தனர். அப்போது அறை வாங்கிய நண்பன் புதை மணலில் சிக்கி கொண்டு உயிருக்காக போராடினான். உடனடியாக மற்ற நண்பன் ஓடிச்சென்று போராடி தன் நண்பனை காப்பாற்றினான். அப்போதும் எதுவும் பேசாமல் ஒரு கல்லின் மீது அமர்ந்து கொண்டு "என் உயிர் நண்பன் இன்று என் உயிரை காப்பாற்றி விட்டான்" என்று கல்லில் எழுதினான். இதையெல்லாம் பார்த்த மற்ற நண்பன் நான் உன்னை அறைந்த போது மணலில் எழுதினாய். தற்போது உன்னை காப்பாற்றினேன் கல்லில் எழுதுகிறாய் ஏன் இப்படி? என்று கேட்டான். அதற்கு அந்த நண்பன் இவ்வாறு பதில் கூறினான். யாராவது நம்மை காயப்படுத்தினால் அதை மணலில் எழுதிவிடு, மன்னிப்பு என்னும் காற்று அதை அழித்து விட்டு போய் விடும். ஆனால் யாராவது நல்லது செய்தால் அதை கல்லில் எழுதி விடு, அது காலத்தை தாண்டி நிலைத்திருக்க வேண்டும் என்றான். எனவே கடவுளின் பிள்ளைகளாகிய நாம் மன்னிக்கவும், பிறரிடம் பலன் எதிர்பாராமல் அன்பு செய்யவும் கற்று கொள்ள வேண்டும். நமது குடும்பங்களில், கல்வி கூடங்களில், நாம் வாழும் சமூகத்தில் இத்தகைய மனநிலையை நாம் பின்பற்றினால் நிச்சயம் நாடும், வீடும் நலம் பெறும்.

**அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...**



அருட்பணி. பீட்டர் பெனடிக்ட் ராஜன்,
இயக்குநர்

# சுற்றுச்சூழலை பாதுகாப்போம்

"நமது நிலத்தை காக்கும் போராட்டத்தில் நாம் வென்றாக வேண்டும். ஏனென்றால் தப்பித்து ஓடுவதற்கு நமக்கு இடமில்லை. முயற்சி என்பது விதை அதை விதைத்து கொண்டே இரு. முளைத்தால் மரம் இல்லாவிட்டால் மண்ணிற்கு உரம்."

தாவரங்கள், மரங்கள் மற்றும் இயற்கை வளங்கள் நிறைந்த நல்லதொரு சுற்றுச்சூழல் நமக்கு கிடைத்தது கடவுள் நமக்களித்த பெருங்கொடையாகும். நம்மை சுற்றிலும் பச்சை பசேல் என்ற சூழல் இருந்தால் அது நமக்கு புத்துணர்ச்சி அளிப்பது போல் தோன்றும். மரங்கள் மற்றும் பூக்கள் நம் மன பாரத்தை அகற்றி விடும். அதிக அளவில் மரங்கள் இருந்தால் தேவையான அளவு மழை பொழிந்து ஆண்டு முழுவதும் நாம் தண்ணீர் பற்றாக்குறையின்றி வாழலாம். ஆனால் பல நேரங்களில் நமக்கு கிடைத்த வளமான இயற்கை வளங்களை நாம் பாதுகாக்க தவறிவிடுகிறோம். மனிதன் மகிழ்ச்சியாக வாழ கடவுள் உருவாக்கிய மாபெரும் கொடை தான் இயற்கை. இந்த இயற்கை செல்வங்களை பாதுகாக்கவும், வளர்த்தவும் தான் கடவுள் நம்மிடம் அவற்றை ஒப்படைத்தர். ஆனல் நமது பேராசையின் காரணமாக மரங்களை வெட்டியும், மலைகளில் இருந்து மண்ணை எடுத்தும், பாறைகளை உடைத்தும் நம் தாய் மண்ணை சேதபடுத்துகிறோம். அதிக பணத்திற்காக நாம் செய்கின்ற இந்த செயல்களெல்லாம் தற்போது நம் வாழ்வுக்கு எதிராக திரும்பியுள்ளது.

மழை பெய்ய வேண்டிய காலங்களில் போதிய மழையின்மை, அதிக வெப்பம் போன்றவை தற்போது இயற்கையில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத மாற்றங்கள் ஆகும். தற்போது இயற்கை தனது குணத்தை எதிர்மறையாக மாற்றி மக்களுக்கு அதிக கஷ்டங்களை கொடுக்க துவங்கியுள்ளது. இந்த சிக்கலோடு இரசாயன உரங்கள் மற்றும் அதிகளவில் பிளாஸ்டிக் பொருட்களின் பங்களிப்புகளும் தற்போது மேலும் சுற்றுசூழல் சீரழிவை ஏற்படுத்தி வருகிறது. ஆண்டு முழுவதும் தண்ணீர் வற்றாமல் ஓடி கொண்டிருக்கும் ஆறுகள், ஏரிகள், அணைகள் போன்றவை தற்போது வருடத்தில் பல மாதங்கள் வற்றி காணப்படுகின்றன. அழகழகான பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள் மற்றும் பல்வேறு வகையான பூச்சியினங்கள் சேர்ந்து அழகு சேர்த்த இந்த இயற்கை சூழலில் தற்போது அவற்றின் இனிய சத்தங்களையும், வண்ணங்களையும் நம் ஊரில் காண்பது அரிதாக உள்ளது. இயற்கை என்பது சாதாரணமானது அல்ல அது மனித தேவைகளை பூர்த்தி செய்யும் வளங்களை கொடுக்கும் ஒரு பசுமை வீடாகும். நீர், தாவரங்கள், விலங்குகள், மனிதன் மற்றும் மண் உட்பட அனைத்திலும் இயற்கை என்பது மிகவும் ஒருங்கிணைந்த, அனைத்து வாழ்க்கை முறைகளிலும் உயிர் வாழ்வதற்கு தேவையான, அனைத்திலும் ஒன்றோடொன்று சார்ந்த அமைப்பு முறையாக உள்ளது. உண்மையில் இன்றைய நவீன அறிவியல் மண், நீர், காற்று, தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதனுக்கு இயற்கையால் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கான அனுபவ பூர்வமான ஆதாரங்களை வழங்கியுள்ளது. இவற்றுள் ஏதாவது ஒரு பகுதியின் தோல்வியானது மற்ற பகுதிகளின் உற்பத்தி தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்தும். அதன் விளைவாக, மனித வாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் இயற்கை சூழலை நாம் நேசிக்கவும், மதிக்கவும் செய்தல் மிகவும் அவசியமாக உள்ளது.

சுற்றுசூழலை பாதுகாப்பதிலும், அதன் தரத்தை உயர்த்துவதிலும் குழந்தைகள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தைகளும் வீட்டின் அருகாமையில் பயன்தரக்கூடிய மரங்கள் நடுதல், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்த்தல், குழந்தைகள் பலர் சேர்ந்து ஒரு குழுவாக சுற்றுசூழலை பாதுகாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல், இயற்கை உரங்கள் பயன்படுத்தி காய்கறிகள் பயிரிடுதல், நீரை பாதுகாத்தல் போன்ற சுற்றுசூழலை பாதுகாக்கும் செயல்களை செய்ய முன்வரவேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ள பயன்தரும் சில செயல்களை குழந்தைகளாகிய நீங்கள் தொடர்ந்து செயல்படுத்தினால் நம் தாய்மண்ணை பாதுகாக்கலாம்.

- பல் தேய்த்து முடித்தவுடன் நீரை வீணாக்காமல் குழாயை அடைக்கவும்
- நாம் இருக்கும் அறையை விட்டு வெளியே வரும் போது மின்விளக்கு மற்றும் மின் விசிறி ஆகியவற்றை அணைக்க வேண்டும்
- உணவு பொட்டலங்கள் கட்டும் போது பிளாஸ்டிக் பேப்பர் மற்றும் டப்பாக்கள் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்
- இலைகள், பழத்தோல்கள், காய்கறி கழிவுகள் ஆகியவற்றை போட அதற்கென ஒரு குப்பை தொட்டியை வைத்து அதற்குள் போட வேண்டும். அவை இறுதியில் இயற்கை உரமாக மாறி நமக்கு பயன்தரும்.
- பள்ளி, சந்தை மற்றும் நண்பர்கள் வீட்டிற்கு செல்லும் போது முடிந்த வரை பேருந்தில் பயணம் செய்வதை தவிர்த்து நடந்தோ, மிதிவண்டியிலோ செல்லலாம்.

நம் இயற்கையை பாதுகாக்க நம்மால் முடிந்த அளவு இந்த சிறு செயல்களை கடைபிடித்தல் அவசியம். இயற்கையை அழிக்க நமக்கு எந்த அதிகாரமும் இல்லை. நாம் இயற்கையை பாதுகாத்தால் வருகின்ற தலைமுறையினர் சிறப்போடு வாழ வழி பிறக்கும்.

**ஷாஜன் ஜோசப்**, திட்ட அலுவலர்

# வெற்றி நம் வசமாகட்டும்

வெற்றிக்கனியை சுவைக்க வேண்டும் என்ற ஏக்கம் இல்லாதவர்கள் எவருமே இப்பாரில் இல்லை எனலாம். தாங்கள் எடுத்துக்கொண்ட எல்லா முயற்சிகளும் வெற்றி பெற வேண்டும் என எப்போதும், எல்லோரும் விரும்புகின்றனர். "துன்பங்களுக்கு காரணம் ஆசையே" என மொழிந்து ஆசையையே அடக்க ஆசைப்பட்ட புத்தனும் தான் எடுத்த முயற்சியில் வெற்றி பெற விழைந்தார். வெற்றி பெற வேண்டும் எனும் ஆவல் மனித வாழ்வில் இரண்டற கலந்து, மாற்ற இயலாதது. அது மனித இயல்பு. ஆதலால், வெற்றி பெறுவது எப்படி? எனும் வினாவிற்கு விடைத்தேடி நாமனைவரும் அனுதினமும் அலைந்துக் கொண்டேயிருக்கிறோம். புத்தகங்கள் பல புரட்டுகின்றோம், அறிவுரைகளுக்காய் ஆவல் கொள்கின்றோம்.

இக்கேள்வியினால் தூக்கம் இழந்து, பசி மறந்து, ஆராட்சிகள் பல புரிந்து சமூகத்தில் மிக பெரிய சீர்திருத்தத்தை கொணர்ந்த Sr. Thomas Fowell Buxton (1786-1845) "தன்னிடமிருக்கும் திறமைகளை அறிந்து, அதனை நன்கு உபயோகித்து, இடைவிடாமல் கடினமாக உழைத்து வருபவன் எவனும், தான் விரும்பிய அனைத்திலும் எப்போதும் வெற்றி பெற இயலும்" என்கின்றனர். வெற்றியின் இரகசியம் தன்னுடைய திறமைகளை பெருக்கி கொள்வதில் அடங்கியிருக்கின்றது. கடினமான உழைப்பு இதற்கு மூலதனமாக அமைகின்றது. இடைவிடாமல் முயன்று தன்னுடைய திறமைகளை வளர்த்துக்கொள்பவரை வெற்றி எப்போதுமே தழுவிக்கொள்ளும்.

மாபெரும் செயல்களை செய்து முடிப்பதற்காக தான் இறைவன் நம்மை படைத்திருக்கின்றார், பராமரித்தும் வருகின்றார். இதை நாம் நம்முடைய கடினமான உழைப்பின் மூலமாக தினந்தோறும் நிரூபித்துக் கொண்டேயிருக்க வேண்டும். இறைவன் நமக்கென எல்லையற்ற திறமைகளை, ஆற்றல்களை தந்திருக்கின்றார். கணக்கிடயிலா திறமைகளை அவர் நமக்குள்ளே புதைத்து வைத்திருக்கின்றார். அவற்றை கண்டறிந்து, வெளிக்கொணர செய்வது நம் கடமையாகும். எந்த சூழ்நிலையிலும் முயன்றவர்கள் அனைவரும் வெற்றியை வசமாக்கியிருக்கின்றார்கள். பாதக சூழல்களை காரணமாக்கி பழித்து திரிந்தவர்கள் முயலாமல் தோல்வியுற்று மடிந்து இருக்கின்றார்கள். ஏழை குடும்பத்தில் பிறந்து கல்வி கற்க கூட வசதி கிடைக்காத பலரும் வாழ்க்கையில் முன்னேறி மங்காத புகழை அடைந்திருக்கிறார்கள். நான் குடும்பத்தில் பிறந்து விட்டேன், எனக்கு படிப்பதற்கு வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டது என்றெல்லாம் சூழ்நிலைகளை பழித்துக்கொண்டேயிருந்தவர்கள் ஏனோ பிறந்தோம், ஏதோ வாழ்கிறோம் என கூறிக் கொண்டே எப்பயனும் இல்லாமல் மடிந்திருக்கிறார்கள். சோம்பேறிகளாய் தங்கள் வாழ்வை பொருளற்றதாய் அழித்திருக்கின்றார்கள்.

ஆபிரகாம் லிங்கன் ஓர் ஏழை விவசாயின் மகனாக அமெரிக்காவில் பிறந்தார். சிறுவனாய் இருக்கும் போது படிக்கும் வாய்ப்பு கிடைக்காமல் படகோட்டியாக வேலை பார்த்தார். அறுவடை காலத்தில் தன் தந்தையோடு இணைந்து பிறருடைய நிலத்தில் கூலி வேலை செய்தார். மரம் வெட்டும் தொழிலையும் செய்தார்.

பின்னர் தன் கடின உழைப்பால் தபால் அலுவலகத்தில் சாதாரண பணியாளராக பணிபுரிந்தார். இரவு நேரங்களில் தெருவிளக்கின் வெளிச்சத்தில் சுயமாக படித்து வழக்கறிஞர் பட்டம் பெற்று வழக்கறிஞராக தன்னை உயர்த்திக்கொண்டார். பிற்காலத்தில் 1860-ல் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ரேடியம் எனும் மூலகத்தை கண்டுபிடித்த மேரி கியூரி நோபல் பரிசு பெற்றுக்கொண்டார். இவர் போலந்து நாட்டில் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். இளமை பருவத்தில் சரியாக சாப்பாடு கிடைக்காமல் சில வேளைகளில் உடல் சோர்ந்து மயக்கமுற்று கூட விழுந்திருக்கின்றார். பின்னர் தன் அயராத உழைப்பால் உயர்ந்து ரேடியத்தை கண்டுபிடித்தார்.

எவ்வளவு சோதனைகள், எதிர்ப்புகள், துன்பங்கள் வந்தாலும் எடுத்துக்கொண்ட காரியத்தை இடையில் நிறுத்திவிடாமல் வெற்றி கிடைக்கும் வரையில் தொடர்ந்து செய்து வருபவர்களுக்கு தான் புகழும், பரிசுகளும் கிடைக்கும். மின் விளக்கை கண்டுபிடித்து உலக புகழ் பெற்ற தாமஸ் ஆல்வா எடிசன் அதை கண்டுபிடிப்பதற்கு முன் 900 முறைகள் முயற்சி செய்து தோல்வி கண்டிருக்கிறார். அப்படியிருந்தும் மனம் தளராமல் தொடர்ந்து முயற்சிகள் பல செய்து இறுதியில் மின்விளக்கை கண்டுபிடித்து வாழ்வை ஒளிமயமானதாக மாற்றினார், சரித்திரத்தில் நாயகனானர். தோல்வி என்பதையே காணாமல் எப்போதும், எல்லாவற்றிலும் வெற்றியை மட்டும் ஒருவரால் தொடர்ந்து கண்டு வர இயலாது. ஆனால் பல தோல்விகளை நம்மால் தவிர்க்க இயலும். முயற்சி செய்து தோல்விகளை வெற்றி படிக்கட்டுகளாக மாற்ற இயலும். இறந்தும் காலத்தால் அழிக்க இயலாமல் புகழோடு சாகாமல் வாழ இயலும்.

நம்முடைய திறமைகளை கண்டறிந்து, இலக்கை நிர்ணயித்த பின், நான் பள்ளிக்கூட மாணவன், எனக்கு இன்னும் வயதாகவில்லை, எனக்கு அனுபவம் போதாது என்பவன் முட்டாள். இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் கழித்து என்னுடைய இலட்சியத்தை அடைவதற்கான முயற்சியை நான் துவங்க போகிறேன் என்பவன் சோம்பேறி. ஒருவன் செய்யும் செயல்கள்அவனுடைய மனநிலையை பொறுத்து தான் அமையுமே தவிர, அவனுடைய வயதை பொறுத்ததல்ல. பன்னிரண்டு வயது நிரம்புவதற்கு முன்பே இசை மேதைகளாக தங்களை உயர்த்தி கொண்ட சிறுவர்களையும், நடன வல்லுநர்களையும், கணித மேதைகளையும் தொலைகாட்சியில் தினந்தோறும் கண்டுகொண்டிருக்கிறோம், பத்திரிகைகளில் வாசித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே நம்முடைய திறமைகளை கண்டறிவோம் அதை பெருக்க செய்வோம். நம்முடைய இலட்சியத்தை நோக்கிய பயணத்தை இன்றே ஆரம்பிப்போம். வெற்றி நம் வசமாகட்டும்.

அருட்பணி முனைவர் ஜோஸ்

குருமட அதிபர், மார்த்தாண்டம் மறைமாவட்டம்

## 2017-ம் ஆண்டு தளிர்கள் உலகத் திட்டத்திலிருந்து விடைபெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| நாள் | : | ஜுன் 9, 2017 |
| 12-ம் வகுப்பு முடித்தவர்கள் | : | 23 நபர்கள் |
| சிறப்பு விருந்தினர் | : | சூசன்னா விம்பா, ஜெர்மனி |
| வழங்கப்பட்ட சிறுசேமிப்பு தொகை | : | ரூ.3,20,302 |
| அதிகபட்ச சிறுசேமிப்பு தொகை | : | ரூ.18,449 |
| வங்கி இருப்பு | : | ரூ.2,73,701 |









## நட்பு

தாய் கருவில் சுமக்கிறாள்
தந்தை இதயத்தில் சுமக்கிறார்
நண்பன் எதையும் சுமப்பதில்லை - ஏனென்றால்
நட்பு சுமையல்ல, சுகமானது.
பூக்களின் தேனை வண்டு பிரிக்கும்
உதடு இரண்டையும் சிரிப்பு பிரிக்கும்
உயிரின் உயிரான நட்புக்கோ பிரிவே இல்லை

**ஆர்.ரித்திகா** வகுப்பு IV, பாலவிளை


## கருவறை



வார்த்தையால் பேசினேன்
கண்களால் ரசித்தேன்
சுவாசத்தால் நுகர்ந்தேன்
இருளிலே ஒளிர்ந்தேன்
- தாயின் கருவறையில்

**S. அபின்,** தச்சூர்கோணம்

## நண்பன்



கவலைகளின் நேரத்தில் ஆறுதலாக
வேதனைகளின் நேரத்தில் துணையாக
துன்பங்களின் நேரத்தில் இன்பமாக
எந்நேரத்திலும் துணைநிற்பவன் நண்பன்
அவனுடைய நட்பே நட்பு.

**S.S.அர்ஷா** வகுப்பு VIII, வெட்டுக்குழி

## தமிழ்

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்.

**C.ஆன்சி** வகுப்பு VIII, வெட்டுக்குழி

# கனவு காணுங்கள்

2020-ல் வல்லரசாகும் என் இந்தியா. ராமேஸ்வரம் தீவினிலே முளைத்து இந்தியாவில் விஞ்ஞான வித்திட்டு மண்ணில் தன்னை விதையாக்கிய மனித புனிதர் கலாம்.



ஜெ.ல.ஜெமி,
11-ம் வகுப்பு, முகவூர்

தீவின்லே படகோட்டி மகனாய்ப்பிறந்து விண்ணில் தேரோட்டிய விந்தை நாயகர்.
ரோகிணி செயற்கைக்கோள் வடிவமைத்து ரசித்து ஜெயித்த சாதனையாளர்
பிருதவி, ஆகாஷ் ஏவுகணைகளை ஆக்கி நாட்டைக் காத்த உயர் காவலர்.
இதய நோய்க்கு "ஸ்டெண்ட்" தந்து பாமரன் இதய துடிப்பானவர்.
மாற்றுத்திறனாளிக்கும் உலோகக்கலாமாகி மகிழ்வித்த புனிதர்.
தன்னலமற்ற தேசபற்றுமிக்க அணு விஞ்ஞானத்தந்தை.
பிஞ்சு நெஞ்சங்களை மறைவிலும் கவர்ந்திழுத்த கவர்ச்சிக்காதலன்.
இளைஞர் மனதினில் அறிவியல் தீபம் ஏற்றிய இதமான உதயசூரியன்.
மதபேதமில்லா நல்லெண்ணங்கொண்ட மத நல்லிணக்கத் தூதுவன்.
மண்ணில் விதைக்கப்பட்டார் .. .. .. ஏன்.. .. .. ..? எதற்காக.. .. ..?

ஒரே பதில், என் தேசம் வல்லரசாகிவிடும் என்ற உணர்வு தேசமெங்கும் விதைக்கப்பட .. ..மக்கள் ஜனாதிபதியாய் வாழ்ந்து மடிந்து, எல்லா உள்ளங்களிலும் அணையா தீபமாகி, இன்றும் இளைஞர் மனதினில் சுடர்விடும் கலாம் அவர்கள் சொன்னது போல, உங்கள் கனவு என் இந்தியா 2020-ல் வல்லரசென்பது மட்டுமே.

கனவு காண்கின்றீர்கள் தானே.. ... ..!
உயர்திரு கனவு நனவாக,
அவர் பரமதேசத்தின் பங்குபெற
என் பரமதேவன் இன்றே அருள்புரிவீராக.. ..

"காண்போம் விரைவில்... ...
வல்லரசான இந்தியா"

## ஆஸ்தி 2017-ல் திட்டத்திலிருந்து விடைபெற்றவர்கள்



பள்ளி கவிதைகள்



கல்வி என்னும் சாலையிலே
பெரும் கூட்டம் வரும் காலையிலே!
வகுப்பறை என்னும் தோட்டத்திலே
பூத்து குலுங்கும் மாணவர்களே!
அதற்கு தண்ணீர் ஊற்றுவது போல் தினமும்
அறிவூட்டும் ஆசிரியர்களே!
பெற்றோர்கள் கனவுகளைப் பூர்த்தி
செய்ய வேண்டும் மாணவர்களே!
அதற்கு படிப்பு வரும் வேளையிலே
அதை ஏற்று கொள்ளவும் மூளையிலே!




**G. கின்சிகா** வகுப்பு VI, மாத்தூர்கோணம்

## God



My lord is good
I love him
I see very best
I can do all the voice
My presence I feel
I my god is feel very presence
I feel in my God



**C.R.Ageethraj Std : VI**

## வகுப்பறை

அழகிய என் வகுப்பறையே
அறிவையும், உலகையும் தெரிந்து கொள்ள வைத்தாயே
தலைவர்களையும், கவிஞர்களையும் படைத்தாயே
உண்மையையும், ஞானத்தையும் கற்றுக்கொள்ள செய்தாயே
மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களில்
ஒருவரை என் ஆசிரியராக தேர்ந்தாயே
செம்மொழியாம் தமிழ்மொழியை கற்க வைத்தாயே
அறிவியல் வளர்ச்சியையும் கண்டு கொள்ள செய்தாயே
புனிதமான கல்வியை எங்களுக்கு அளித்தாயே
இதே போல் ஒரு வகுப்பறையை எப்போது காண்போமோ



**L.S. ஆன்சி** விமலபுரம்

## இயற்கை



உயிரினங்களை தந்த இயற்கை
உணவுகளை தந்த இயற்கை
காற்றை தந்த இயற்கை
காட்சிகளை தந்த இயற்கை
மருந்தை தந்த இயற்கை
நம்மை அரவணைக்கும் இயற்கை
இவ்வளவும் தந்த இயற்கையை
நம் நெஞ்சம் மறந்ததேன்?
சற்று யோசி!
இயற்கையை நேசி!



**S.S. ஜின்சி**

## உங்களுக்கு தெரியுமா ?

### சாக்லேட்டின் கதை

மத்திய அமெரிக்காவில் வாழ்ந்த மாயன் இன மக்கள் கி.மு.600 ஆண்டுகளிலேயே சாக்லேட் பயன்படுத்தி உள்ளனர். தெற்கு மெக்சிகோவில் அவர்கள் கொக்கோ மரங்களை பயிரிட்டு வளர்த்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. நாம் இன்று சாப்பிடும் சுவையான நவீன சாக்லேட்டுகள் 19 - ம் நூற்றாண்டில் தான் தயாரிக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ஜோசப் பிரை என்பவர் 1847 - ல் சாக்லேட் தூளுடன், சாக்லேட் வெண்ணெய் மற்றும் சர்க்கரை சேர்த்து கட்டி வடிவில் சாக்லேட் தயாரிக்கும் முறையை கண்டறிந்தார். 1868 - ல் சாக்லேட் தயாரித்து வழங்கும் முதல் நிறுவனமான கேட்பரி தொடங்கப்பட்டது. இங்கிலாந்தில் தொடங்கப்பட்ட அந்த நிறுவனம் இன்றளவும் உலகம் முழுவதும் சாக்லேட் சந்தையில் சிறந்த இடத்தை பிடித்து உள்ளது.




**K.S.அபிஷா**
மாத்தூர்கோணம்

## I Like Doctor



I am a doctor. I hope human life is God's gift. I am always service to them. I have secured and protect illness every people. I am frost to important love and sympathy. So give good treatment medication and research also. I have prescribed good treatment.



**P.K.Vikitha Std : VI**

## வேண்டாம் இந்த சிசுக்கொலை!

சிசுக்கொலை என்று சொல்லிடிலோ
ஒவ்வொரு தம்பதியும் தலைகுனியும்!
வீட்டில் பசுங்கன்று பிறந்து விட்டால்
குதூகல கொண்டாட்டம்!
ஆட்டுக்குட்டி பெண்ணாயின்
அங்கும் நிலவும் பெருமகிழ்ச்சி!
வீட்டில் பெண் குழந்தை பிறந்து விட்டால்
அங்கே பரவுது காரிருளாம்!
நாட்டில் ஆங்காங்கே கொலைக்கிழவி
கள்ளிப்பாலுடன் ஓடி வருவாள்!
உண்ண உதவும் சோறான
சின்னஞ்சிறு நெல்மணியும்
பச்சிளம் சிசுவிற்கு எமனாகும்!
தெய்வச்சாயலில் உள்ள சிசு
தெய்வம் தந்த சின்னசிசு
கருவில் அழிக்கும் பாவிகளை
தெய்வம் மன்னிப்பு அருள்வாரோ?
"ஸ்கேன்" என்னும் கொலைக்கருவி
கருவில் உள்ள பெண்சிசுவைக்
காட்டிக் கொடுக்கும் எட்டப்பன்!
அது அழிந்து ஒழிந்து போகட்டும்
வாழ்க வாழவிடு என்று
பெண்சிசு மன்றாடும் அவலக்குரல்
பாழ்மனிதர் காதுகளில் கேட்பதுண்டோ?
தாயும் தன்பெண் சேயினை ஒரு
நாயினைக் கொல்ல கொடுத்தல் போல்
வேறொரு கொடுமை உலகில் உண்டோ?
வீழும் உடலை எழுப்பிடவோ ஒரு
வேந்தன் நினைக்கினும் ஆகாது.
ஆளும் அன்புடைய தெய்வபிரான் - அன்று
கூறிய மொழியை நினைவிற் கொள்க.

T.D. ஷர்மி வகுப்பு X








BLESSING

## கவிதை



ரசித்து பார் கவிதை வரும்
பிரிந்து பார் சோகம் வரும்
நினைத்து பார் அழுகை வரும்
சேர்ந்து பார் மகிழ்ச்சி வரும்

S.அபிஷேக் வகுப்பு IX

## அவசரம்

சீடன் : குருவே எனக்கு பகவத்கீதை கத்துக்கணும்.

குரு : சரி உட்கார்.

சீடன் : குருவே முழுசா படிக்க நேரமில்லை. எதை படிச்சா நிறைவு வருமோ அதை மட்டும் சொல்லி கொடுங்க.

குரு : சரி. கடைசி அத்தியாயம் படி.

சீடன் : கடைசி அத்தியாயம் முழுசா படிக்காம அதுல முக்கியமானதை மட்டும் சொல்லுங்க.

குரு : சரிப்பா. கடைசி அத்தியாயத்துல கடைசி சுலோகம் மட்டும் படி.

சீடன் : குருவே! சுலோகம் முழுசும் படிக்காம ஒரே ஒரு வரி மட்டும் சொல்லுங்க.

குரு : சரி. "கவலைப்படாமலிரு" இதை மட்டும் மனதில் பதிய வை.

சீடன் : ரொம்ப நன்றி குருவே. சரி எப்படி கவலைப்படாம இருக்கிறது.

குரு : ரொம்ப சுலபம்! பகவான் சொன்னபடி நடந்தா போதும்.

சீடன் : பகவான் என்ன சொன்னாரு.

குரு : பகவத் கீதையை ஆரம்பத்திலிருந்து படிச்சா அது தெளிவாகும்.

**சிந்தனை : கற்று கொள்வதில் அவசரமும், சோம்பேறிதனமும் கூடாது.**

**போதிப்பதில் பொறுமையுடன் பக்குவமும் வேண்டும்.**

**சுமித் ரிச்சர்ட்**
வகுப்பு VIII,
தேமானூர்

## *CHILDRENS DAY*





நாள் : நவம்பர் 4, 2017

இடம் : மீட்ஸ் அரங்கம், குழித்துறை











## தளிர்களுடைய உலகம்

பூமியில் விழுந்த மழையில் உருவான, தளிர் போன்ற குழந்தைகளை
ஒரு தாயின் பிள்ளைகள் போல் ஒன்று சேர்த்து
பண்பான நிலத்திலே நட்டு வைத்தாயே!
இருளகற்றும் கதிரொளியாய் கதிர்களுக்கு நல்லொளி போல்
எங்களுக்கு அறிவொளியை தந்தாயே!
பூ மழை தூவி தளிரை குளிராக்குவது போல்
எங்களையும் அன்பு மழையால் நனைத்தாயே!
உரமிட்டு தளிருக்கு பயன் அளிப்பது போல்
நற்பண்பால் எங்களையும் பண்படுத்தினாயே!
தளிருடன் வளரும் களைகளை அகற்றுவது போல்
எங்களிடம் இருந்த சோம்பலை அகற்றி தந்தாயே!
இரவு பகல் பாராமல், தளிருக்கு காற்று உதவுவது போல்
எந்நேரமும் உழைக்கும் நல்ல வழிகாட்டிகளைத் தந்தாயே!
ஏழை எளிய மாணவர்களை தேர்ந்தெடுத்து, அவர்கள்
வாழ்வில் உயர பல உதவிகள் செய்தாயே!
வெளியுலகம் காணாத மாணவர்களை
உல்லாசப் பயணம் அழைத்துச் சென்றாயே!
பயத்தினால் சுருண்டு கிடந்த மாணவர்களை
தைரியமாக மேடை ஏற வைத்தாயே!
இத்தனை உதவிகளுக்கும்
தளிர்கள் உலகமே உனக்கு நன்றிகள்!
என் உயிர் உள்ளவரை
நான் மறக்கமாட்டேன் "தளிர்கள் உலகமே" உன்னை!



**K.A.அகன்ஷியா** வகுப்பு XII

## வெற்றி

வெற்றி என்பது தானாக கிடைப்பதில்லை
அது வியர்வை துளிகளின் முத்துக்கள்
முடங்கி கிடந்தால் சிலந்தியும் உன்னை சிறைப்படுத்தும்
எழுந்து நடந்தால் ஆழ்கடலும் உன்னை வரவேற்கும்
தோல்வியை கண்டு துவளாதே
விதை கூட விழுந்தால் தான் விருட்சமாகிறது
விடாமுயற்சி இருந்தால் வெற்றி உன்னை நாடி வரும்
தோல்வியே மனிதனை வெற்றியின் சிகரத்தில்
ஏற்றும் படிக்கட்டுகள் துடிப்பாய் இரு!
வென்றிடு.........

**A.அபிதா** வகுப்பு VII

# MOTIVATION CLASS










நாள் : மே 13, 2017
இடம் : மீட்ஸ் அரங்கம், குழித்துறை
பங்கேற்றாளர்கள்: 9 மற்றும் 11-ம் வகுப்பு மாணவர்கள் 63 நபர்கள்
பயிற்சியாளர் : திரு.அலோசியஸ்

## இறை உணர்வு நேரங்கள்

ஒழுக்கம் உயிரினும் மேலானது என்று நாமும் சொல்கிறோம், உலகமும் சொல்கிறது. எது ஒழுக்கம்? நல்லதையே சொல்வதும், செய்வதும் தான் ஒழுக்கம். ஏன் நாம் ஒழுக்கம் தவறுகிறோம்? நம்மை விட நல்லவர், எல்லாம் வல்லவர் ஒருவர் இருக்கிறார் என்று உணர்ந்து கொண்டால் நம் ஆணவம் அடங்கும். நம் மீது அன்பு காட்ட, நம்மை பாதுகாக்க வல்லவர் ஒருவர் இருப்பதை உணர்ந்தால் பயம் நீங்கும். உண்மையில் இறைவன் நமக்குள் இருந்து கொண்டு தான் நம் ஒவ்வொருவரையும் இயக்குகிறார். நமது மனதுக்குள் தான் மோட்சமும் இருக்கிறது, நரகமும் இருக்கிறது. இறை நம்பிக்கையில், இறை உணர்வில், இறைவன் வழியில் நடக்க முயல்வதில் நாம் வளர்ந்தால் நம் வாழ்வும் உயரும். இறைவனே இல்லை என்று நம்மில் சிலர் கருதக்கூடும். ஆனால் அவர்களும் இயற்கை பேராற்றல், நம்மை மீறிய ஓர் சக்தி நம்மை வழிநடத்துகிறது என்பதை மறுக்க மாட்டார்கள்.


நாம் நல்லவர்களாக நல்வழியில் வளரும் வரை இந்த இயற்கை நமக்கு துணைநிற்கிறது. இதற்காக தான் வழிபாட்டிற்கென்று நாம் ஒவ்வொரு நாளும் சில நிமிடங்களை ஒதுக்கி கொள்வது அவசியமாகிறது. நாள் முழுதும் வழிபாட்டில் மூழ்கி இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை, அது தேவையுமில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் நாம் நமக்குள் இருக்கும் இறைவனோடு சில நேரங்கள் பேச வேண்டும். அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். "நாம் இறைவனை வழிபடும் நிமிடங்கள் தான் நம்மை இறைவனை நோக்கி உயர்த்திச் செல்லும் நிமிடங்கள். நம்மை நல்லவர்களாக வாழ வைக்கும் நிமிடங்கள்"



N.சிபியா வகுப்பு VIII

## தூரத்து ஒளி


மாலைப் பொழுதில் வழக்கம் போல் யமுனை ஆற்றங் கரை ஓரம் மன்னர் அக்பரும், பீர்பாலும் பேசிக்கொண்டே நடந்தனர். பனிக்காலம் அது குளிர் கடுமையாக இருந்த நேரம். மன்னரின் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது. உடனே பீர்பாலிடம் "பீர்பால இந்த பனியிலும், கடுங்குளிரிலும் ஓர் இரவு முழுவதும் இந்த ஆற்று நீரில் யாராலாவது நிற்க முடியுமா? என்றார். என்னால் இயலாது மன்னா! ஆனா விடுங்கள் என்றார் பீர்பால். உங்களால் இயலாது என்பது எனக்கு தெரியும். இரவு முழுவதும் யமுனை ஆற்று நீரில் யார் நிற்கிறார்களோ அவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என்று நாளை காலை முரசு அறைந்து மக்களுக்கு தெரிவியுங்கள் என்றார் மன்னர். "என்ன மன்னா, இதனைப்போய்" என்று இழுத்தடித்தார் பீர்பால். முதலில் நான் சொன்னபடி செய்யுங்கள், பிறகு பார்க்கலாம் என்றபடி பீர்பாலிடம் கூறிவிட்டு புறப்பட்டார் மன்னர். மறுநாள் காலை மன்னரின் அறிவிப்பு தெருவெங்கும் முரசு அறிவித்து கூறப்பட்டது. மிகவும் வறுமையில் வாடும் இளைஞர் ஒருவர் மன்னரின் பரிசை பெற்றாவது குடும்பத்தை வாழ வைக்க வேண்டும் என்று எண்ணினார். எனவே என்னவானாலும் சரி நான் போட்டியில் கலந்து கொள்கிறேன் என்றார். சொன்னபடி போட்டியிலும் கலந்து கொண்டு வெற்றியும் பெற்றார். மன்னர் அவரிடம், இந்தக் குளிரை எப்படி தாங்கி கொண்டு நின்றாய்? என வியப்புடன் கேட்டார். அதற்கு அந்த இளைஞன், மன்னா! அது ஒன்றும் பெரிய செயலில்லை. இரவு முழுவதும் அரண்மனையில் தெரிந்த வெளிச்சத்தை பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தேன் என்றார். உடனே மன்னர், அது தானே பார்த்தேன் இப்பொழுது புரிகிறது உன் குளிரைப் போக்க அரண்மனையிலுள்ள ஒளி உனக்கு உதவி செய்திருக்கிறது. அந்த சூட்டில் தான் நீ இரவு முழுவதும் குளிரில் நின்றிருக்கிறாய். எனவே உனக்கு பரிசு கிடையாது என்றார் மன்னர். மன்னர் இப்படி கூறவும் அந்த இளைஞன் அதிர்ச்சியுடன் மன்னா தாங்கள் இப்படி கூறலாமா? என கண்கள் கலங்க கேட்டவாறு ஏமாற்றத்துடன் திரும்பி சென்றான். இதனை அறிந்த பீர்பால் மன்னனுக்கு பாடம் புகட்ட எண்ணினார். சில நாட்களுக்கு பிறகு அக்பர் வேட்டையாட புறப்பட்டு கொண்டிருந்தார். அக்பர் காவலாளியை அழைத்து பீர்பாலை அழைத்து வர சொன்னார். பீர்பால் காவலாளியிடம் தான் சமைத்து கொண்டிருப்பதாகவும், சாப்பிட்டு விட்டு வருவதாகவும் கூறினார். வெகு நேரமாகியும் பீர்பால் வராததை கண்ட அக்பர் கோபமுற்று பீர்பால் வீட்டிற்கு சென்று பார்த்த போது பீர்பால் ஒரு பாத்திரத்தில் அரிசியை போட்டு தண்ணீர் ஊற்றி வைத்திருந்தார். பின்னர் பத்தடி தள்ளி அடுப்பில் விறகு எரிந்து கொண்டிருந்தது. அக்பருக்கு ஒன்றும் புரியாமல் பீர்பாலிடம் கேட்டார். அதற்கு பீர்பால் அரசே சமையல் செய்து கொண்டிருக்கிறேன் என்றார். அதற்கு அரசர் பீர்பாலிடம் உமக்கு மூளை குழம்பி விட்டதா? பாத்திரம் ஒரு பக்கம் இருக்கிறது. அடுப்பு ஒரு பக்கம் இருக்கிறது. எப்படி சோறு வேகும் என்று கேட்டார். அதற்கு பீர்பால் அரசரிடம் அரசே! யமுனை ஆற்றில் தண்ணீரில் இருந்தவனுக்கு அரண்மனையின் விளக்கின் வெளிச்சம் சூட்டை தந்திருக்கும் போது பக்கத்தில் இருக்கிற அடுப்பில் இருக்கும் சூடு பாத்திரத்தில் பட்டு அரிசி வெந்து விடாமல் போகுமா என்று கூறினார். மிகவும் நாசூக்காக புரிய வைத்த பீர்பாலை பாராட்டிய அரசர் அந்த இளைஞனை அழைத்து ஆயிரம் பொற்காசுகளை பரிசளித்தார் மன்னர்.



M.அஜிஷா வகுப்பு VIII

## அம்மா

உயிருக்குள் உயிரை வைத்து உருவம்
தந்த உன்னத தெய்வம்
காற்றினால் கூட கஷ்டம் வருமோ என்று
கருப்பையில் என்னை காத்திட்டாய்
பாதி இரவுகள் எனக்காய் கண்விழித்தாய்
மீதி இரவுகள் எனக்கே செலவழித்தாய்
நன்னலம் என்று இருந்து விட்டால்
பிள்ளை நலம் என்று பெருமூச்சு விட்டவள் நீ
காலம் முழுவதும் உன்னை தோளில் சுமக்க
ஆசைப்படுகிறேன் அம்மா!
உலகில் எத்தனை அன்பென்னும் கரங்கள் அணைத்தாலும்
நான் மறவாத அன்பு என் "தாயின் அன்பு"



T.K. அஜிதா வகுப்பு XI

## நான் விரும்பும் நூல் - திருக்குறள்

**முன்னுரை**

நம் தாய்மொழியான தமிழில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்கணக்கு முதலிய நூல்களும், சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெருங்காப்பியங்களும் உள்ளன.

**நூலின் அமைப்பு**

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் இந்நூலை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பகுதிகளாக படைத்துள்ளார். 133 அதிகாரங்களும், 1330 பாடல்களையும் கொண்டது இந்நூல்.

**நூல் கூறும் கருத்துக்கள்**

திருக்குறளில் கூறப்படும் கருத்துக்கள் எந்நாட்டவர்க்கும், எம்மொழியினருக்கும், எவ்வினத்தவர்க்கும், எம்மதத்தவர்க்கும் பொதுவானதாக திகழ்கிறது.

**பயன்கள்**

இந்நூலை கற்போரின் உள்ளம் செம்மையுறும். இவ்வுலக வாழ்வில் ஏற்படும் சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகளை இந்நூல் வாயிலாக நாம் அறியலாம். மற்றவர்களோடு வாழும் இனிய வாழ்க்கை முறையை இந்நூல் நமக்கு உணர்த்தும்.

**விரும்ப காரணம்**

ஒன்றே முக்கால் அடியில் சிறந்த வாழ்வியல் கருத்துக்களை இந்நூல் எடுத்தியம்புகிறது. எவற்றை செய்ய வேண்டும், எவற்றை செய்யக்கூடாது எனக் கூறி நம்மை நல்வழிப்படுத்துகிறது. கல்வியின் சிறப்பையும், கல்லாமையின் இழிவையும் எடுத்துக் கூறுகிறது. அனைத்திற்கும் எதுவென்றும், வாய்மை என்றால் என்ன என்றும் வினா எழுப்பி விளங்க உரைக்கிறது. வாழ்வியல் கோட்பாடுகள் அனைத்தையும் கூறுகின்ற ஒரே நூல் திருக்குறளாகும்.

**முடிவுரை**

அறங்கூறும் நூல்களுள் தலையாய நூல் திருக்குறள். மனிதகுலம் அனைத்திற்கும் பொதுவான வாழ்வியல் கருத்துக்களை கூறும் சிறப்பிற்குரியது. அதனால் தான் இந்நூல் உலக பொதுமறை என போற்றப்படுகிறது.

**S.N. ஆர்த்தி** வகுப்பு IX

**பள்ளி**

தாயின் பெயர் கொண்ட பள்ளியில்
பயில்வதால் நான் பெருமை அடைகிறேன்
பட்டங்கள் பல பெற்றும் பதவிகள் பல கிடைத்தும்
தனிமரமாய்..........
அனைவருக்கும் நிழல் கொடுக்கும் தூண்களாய்
எங்கள் பள்ளிகூடத்தை நடத்தி வருபவர்களின்
பள்ளிகூடத்தில் நான் பயில்வதால் நான் பெருமை அடைகிறேன்....

**S.J.ஷாஜிஷா ராஜ்**

## Pongal Celebration

நாள் : ஜனவரி 16, 2017

இடம் : மிட்ஸ் அரங்கம், குழித்துறை

சிறப்பு விருந்தினர் : திரு. கிரேக் ஹோலண்ட், ஆஸ்திரேலியா




## எல்லைப்புற சண்டை

முனுசாமி தன் வீட்டு தோட்டத்தில் கோழிகள் வளர்த்து வந்தான். அவன் தோட்டத்திற்கு வேலி போடாததால் அந்த கோழிகள் பக்கத்து வீட்டு தோட்டத்துக்குச் சென்று மேயத் தொடங்கின. பக்கத்து வீட்டு ரங்கன் எவ்வளவோ சொல்லியும் முனுசாமி வேலி போடாமலே இருந்தான். இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும் என்று ரங்கன் எண்ணினான். மறுநாள் கடைக்கு சென்று ஐந்தாறு கோழி முட்டைகளை வாங்கி வந்து ஒரு செடிக்கு கீழே மறைத்து வைத்தான் ரங்கன். முனுசாமி பார்க்கும் நேரத்தில் முட்டைகளை ஒவ்வொன்றாக ரங்கன் எடுத்து சென்றான். அதைக்கண்ட முனுசாமி அடடா! நாம் வளர்க்கும் கோழிகள் அடுத்த வீட்டில் சென்றல்லவா முட்டை இடுகின்றன?. அதனால் கோழிகளை அங்கே போக விடாமல் தடுக்க வேண்டும் என்று எண்ணி உடனே தோட்டத்திற்கு வேலி போட்டான். அதைக்கண்ட ரங்கன் தன்னுடைய யோசனை பலித்தது கண்டு மகிழ்ச்சியடைந்தான்.

**S.அபிஷேக்** வகுப்பு IX

## அனாதை

தாயிருந்தும் தத்தெடுத்தது குப்பைத்தொட்டி
உயிரிருந்தும் பிரித்தெடுக்குது வயிற்றுப்பசி
வாயிருந்தும் கொடுமைபடுத்தியது சமுதாயம்
அறிவிருந்தும் அடிமைப்படுத்தியது அதிகார குரல்கள்
கண்ணிருந்தும் அழமறுக்குது கண்ணிமைகள்
மனமிருந்தும் மறுக்க துடிக்குது ஆசைகள்
கல்வி கேட்டும் தரமறுக்குது பள்ளிகூடங்கள்
வேலை கேட்டும் வேலிகட்டுது அலுவலகங்கள்
பெண் கேட்டும் தடைபட்டது என் முதலெழுத்து தெரியாமல்

**B. பின்சி**

## MIDS Help

மனதுக்கு தேவை குளிர்
அதை அளிப்பது எங்கள் தளிர்!
மிட்ஸ் செய்யும் சிறு உதவி
பல வருடங்களில் கிடைக்கும் பெரும் பதவி!
ஒரு சிறிய செடி நாங்கள்
அதற்கு உரம் ஊட்டுவது நீங்கள்!
வாழ்வது ஒருமுறை
உங்களை வாழ்த்தட்டும் தலைமுறை!
உங்கள் பரிசுக்கு ஏது ஈடாகும்?

**B. அஜின்** பல்லுக்குழி

# DICTIONARY DISTRIBUTION





## நிலா

இரவில் ஒளியாக வந்தாய்
வானத்தில் திலகமாய் நின்றாய்!
சேய்க்கு உணவூட்ட
தாய்க்கு உதவ வந்தாய்!
பவுர்ணமி அன்று நாற்புறமுமாய்
அழகை சிறப்பித்து நின்றாய்!
அமைதியில்லா மனதிற்கு
இதமாக வந்தாய்!
வளர்பிறையானாலும், தேய்பிறையானாலும்
சலிக்காமல் திகழ்கிறாய்....!

**S.R. ஜெனிபா**

## அன்பு

அம்மா என்று அழைப்பதையே கேவலமாக நினைத்தவன் நிதின். அவனது சிறு வயதிலேயே அவன் அப்பா இறந்து விட்டார். ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த அவன் பள்ளியில் கல்வி கற்க செல்லும் போது தனியாகவே வருவான். அவனது தாயும் அதே பள்ளியில் சத்துணவு கூடத்தில் வேலை பார்க்கிறார்கள்.

அவன் நான்காம் வகுப்பு படிக்கும் போது ஒருமுறை நண்பர்களுடன் விளையாடும் போது தவறுதலாக கீழே விழுந்து காலில் இரத்தம் வடிந்தது. மகனே! என்று அதிர்ச்சியுடன் ஓடி வந்து தூக்கினாள் தாய். உடனே சகநண்பர்கள் அவனிடம் "உன் அம்மா குருடி தானே" என்று கிண்டல் செய்தனர். உடனே நிதின் கடும் கோபத்துடன் தன் தாயை நோக்கி "நீ யார்? என்னைத் தொடாதே" என்றான். தாய் கலங்கினாள். அவன் தாயிடம் இருந்து விலகி செல்ல முடிவு செய்தான். அன்றிலிருந்து அவன் அம்மாவிடம் பேசுவது இல்லை. பின்பு கல்லூரி படிப்பை முடித்து வெளிநாடு சென்றான். அங்கு ஒரு பெண்ணை திருமணம் செய்தான். தாய்க்கு அவனைப் பற்றிய விபரம் தெரியவில்லை. அவனுக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருப்பதை தாய் அறிந்தாள். அவர்களை பார்க்க ஆசைப்பட்டாள். திடீரென்று தாயின் உடல்நிலை பாதிக்கப்பட்டது. ஒருநாள் ஊரிலிருந்து நிதினுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் ஊர் பெரியவர் ஒருவர் பேசினார். "உன் தாய் இறந்து விட்டாள்" என்று கூறினார். அவன் சரி என்னால் வர முடியாது என்று கூறினான். உடனே எதிர்முனையில் பேசியவர், உன் அம்மா கையில் ஒரு கடிதம் இருந்தது. அதில் உனக்கு 2 வயதானபோது ஒரு விபத்து ஏற்பட்டு உன் அப்பாவும், உன் ஒரு கண்ணும் பறிபோனது. எனது மகன் உலகத்தை பார்க்க வேண்டும் என்று நான் எனது ஒரு கண்ணை உனக்கு தந்தேன் என்று எழுதப்பட்டிருக்கிறது என்றார். உடனே நிதினின் கண்கள் கலங்கின. உடனே அவன் தனது மனைவி, பிள்ளைகளுடன் தன் தாயை பார்க்க ஊருக்கு வந்தான். தாயைக் கண்டு கலங்கியவனாக அம்மா! அம்மா! என்று கதறி அழுதான். இது தான் "கண்ணை தானம் செய்த தாயின் அன்பும், அதனை பரிசாகப் பெற்ற மகனின் பாசமும்".



**J.S.அபிஷா ஜோனி** வகுப்பு IX

## SPECIAL COACHING

| வகுப்பு | நாள் | தலைப்பு | பங்கேற்பாளர்கள் |
|---|---|---|---|
| 1 | 16.01.2017 | ஆங்கில மற்றும் தமிழ் அறிவு | 117 |
| 2 | 09.02.2017 | ஆங்கில மற்றும் தமிழ் அறிவு | 129 |
| | 11.03.2017 | ஆங்கில மற்றும் தமிழ் அறிவு | 151 |
| 3 | 03.05.2017 | ஆங்கில மற்றும் தமிழ் அறிவு | 147 |
| 4 | 26.06.2017 | ஆங்கில மற்றும் தமிழ் அறிவு, ஓவிய பயிற்சி | 93 |
| 5 | 08.07.2017 | ஆங்கில மற்றும் தமிழ் அறிவு, ஓவிய பயிற்சி | 64 |
| 6 | 25.08.2017 | ஆங்கில மற்றும் தமிழ் அறிவு, ஓவிய பயிற்சி | 151 |
| 7 | 09.09.2017 | ஆங்கில மற்றும் தமிழ் அறிவு, பொது அறிவு விளையாட்டுகள் | 103 |
| 8 | 07.10.2017 | ஆங்கில மற்றும் தமிழ் அறிவு, இசை பயிற்சி | 120 |

பயிற்சியாளர்கள் : ஆசிரியர் திருநாவுக்கரசு, திருமதி.சங்கீதா, செல்வி.லைலா, செல்வி.ஜெனிபா
பொது அறிவு - அருட்சகோ



## பெற்றோர்கள்



**முன்னுரை:-**

வளர்ந்து வரும் இன்றைய நவீன உலகில் பெற்றோர்களின் நிலை ஒரு கேள்வி குறியாக இருக்கிறது. இந்த கேள்வி குறியானது வளரும் இளைய தலைமுறைகளின் கைகளில் அடங்கியுள்ளது.

**பெற்றோர்கள்:**

பெற்றோர்கள் தங்கள் பிள்ளை பிறந்ததிலிருந்து மூன்று வயது வரை அக்குழந்தைக்கு பேச கற்றுக்கொடுக்கின்றனர். அதற்கு பிறகு பள்ளிகூடங்களில் சேர்த்து கல்வி அறிவையும், மற்றவற்றை பற்றியும் அறிய வழி செய்கின்றனர். பள்ளிப்படிப்பை முடித்தவுடன் கல்லூரிகளிலும் அல்லது மருத்துவம், தொழில்துறை போன்றவற்றில் சேர்க்கின்றனர். அவர்களுக்கு தேவையானவற்றை செய்கின்றனர். கல்லூரி படிப்பை முடித்தவுடன் அவர்களின் தகுதிக்கேற்ப ஒரு நல்ல வேலை வாய்ப்பினை வாங்கி கொடுப்பது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். அதுபோல குழந்தைகளும் தங்களின் பெற்றோருக்கு நன்றி கடனை செய்ய வேண்டும்.




**இன்றைய தலைமுறைகள்:**


இன்றைய இளைஞர்கள் தங்களின் பெற்றோர்கள் செய்த எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவர்களை அனாதையாக விட்டுவிடுகின்றனர். சிலர் அனாதை இல்லங்களில் தங்கள் பெற்றோரை சேர்த்து விடுகின்றனர். வாழ்க்கையில் நாகரீகம் வேண்டும் என்று தன்னை பெற்ற பெற்றோர்களையே உதாசீனபடுத்துகின்றனர்.



**முடிவுரை:**


அவர்களுக்கு குழந்தைகளாக நாம் இருக்கும் போது எதற்கு அனாதை இல்லங்களில் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் நமக்குள் எழ வேண்டும். பெற்றோர்கள் நம் கண்கள், நம் கண்களை நாம் தான் பாதுகாக்க வேண்டும். அதை பிடுங்கி எறிய முடியுமா? பெற்றோர்கள் நமது வாழ்க்கையின் வழிகாட்டிகள். அவர்கள் நம்மை பெறவில்லையென்றால் நாம் இந்த மண்ணில் பிறந்திருக்க முடியாது. ஒரு நல்ல நிலையை அடைந்திருக்க முடியாது.

அகல்யா





## SUMMER CAMP

நாள் : மே 22-24, 2017

இடம் : மீட்பர் அரங்கம், குழித்துறை

பங்கேற்றவர்கள் : 8-ம் வகுப்பு மாணவர்கள் 44 நபர்கள்

பயிற்சியாளர்கள் : ஜூலஸ் ரூத்

கல்வி உதவி தொகை : 40 நபர்களுக்கு ரூ.8,00,000/

## கிறிஸ்துமஸ் விழா

**முன்னுரை :**

"பரமபிதா உலகில் பிறக்க வந்த இறைமகன்" என்று கிறிஸ்தவர்களாலும், இரக்கத்திற்கு வள்ளல், தியாகத்தின் எல்லை என எல்லோராலும் போற்றப்படும் ஏகபெருமானின் இனிய பிறந்தநாளே கிறிஸ்துமஸ் நாளாகும். தேசமனைத்திற்கும் தியாக திருமகனின் பிறந்த நாளே சிறந்த திருநாளாகும்.

**எங்கே பிறந்தார் இறைமகன்?**

அரண்மனையிலா? அலங்கார செல்வந்தர் மாளிகையிலா? அல்லது இயற்கை சூழ்ந்த மலர் தோட்டத்திலா மனுமகன் பிறந்தார்? இல்லை இல்லை! மாட்டுத் தொழுவத்தில் மரியாளின் அருள் வயிற்றில் மகனாகப் பிறந்தார். பெத்லகேம் நகரே அவர் பிறந்த மண். யூதர்களும் அவர்தம் குருமார்களும் மூடநம்பிக்கையில் மக்களை மூழ்கடித்து கொண்டு வாழ்ந்த காலகட்டத்தை மாற்றி புதிய காலகட்டத்தை தொடங்கி வைக்க நம் மீட்பர் பிறந்தார். ஆடம்பர செல்வ செருக்குகளின் ஆணவம் அழித்து ஏழை எளிய மக்களை வாழ வைக்க புரட்சி வித்தகர் பூமியில் பிறந்தார்.

**என்னென்ன நிகழ்ந்தன அங்கே?**

அவர்பிறந்தார், வானிலே வால்நட்சத்திரம் பிறந்தது. யூதர்களின் அரசன் என்று சோதிடர்கள் அவரை கூறியதால் கிழக்திசை அரசர்கள் மூவர் அவர் தோன்றிய இடம் கண்டு வந்து வணங்கி வாழ்த்தினர். மாமன்னன் ஏரோது மனம் நடுங்கி ஆண்குழந்தைகள் அனைவரையும் கொன்று போடச் ஆணையிட்டான். உலகின் நல்ல காலம் ஏழைகளின் இயேசு எப்படியோ அற்புதமாய் தப்பி விட்டார். எளிமையில தச்சர் வீட்டு மகனாய் தாய் தந்தையுடன் வாழ்ந்த இயேசு கோவிலில் கேள்வி கேட்டு ஞானம் வரப்பெற்று ஞாலம் வணங்க நற்றொண்டுகள் புரிய புறப்பட்டு சென்றார்.

பாவிகளுக்காக பாடுபட்ட இயேசுவை பாவி யூதாஸ் காட்டிக் கொடுக்க பாவ சிலுவையில் அறையப்பட்டார். அவரைத் தாங்கியதால் பாவச்சிலுவையும் பார் வணங்கும் பேர் பெற்றது. அவரைத் தாங்கிடும் இதயங்களுக்கும் இப்பேறு உறுதியாய் கிட்டும். அவர் யூதர்களுக்கு அரசரல்லர் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் அவர் கிடைத்தவரல்லர் மாறாக உலக மக்களுக்காகவே உதித்தார்.

**முடிவுரை:**

"குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களை தடுக்காதீர்கள். ஏனெனில் மோட்ச ராஜ்ஜியம் அவர்களுடையது" என அறிவுரை கூறிய இயேசுபிரானை குழந்தையாக தாலாட்டி கொண்டாடும் கிறிஸ்துமஸ் விழாவை எல்லோரும் போற்றுவர். போற்றவும் வேண்டும். அவர் வழியில் வாழ்ந்து காட்டுவது மட்டுமே அவருக்கு வழிபாடாக ஆற்றவும் வேண்டும்.

B. ரேஷ்மா




## CHRISTMAS

நாள் : டிசம்பர் 10, 2016

இடம் : மீட்பர் சமூக கூடம், கன்னியாகுமரி

சிறப்பு விருந்தினர்கள் : மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ், மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மற்றும் அருட்தந்தை சேவியர் ராஜன், கோவளம் பங்குத்தந்தை




# Mothers Traning

| வ.எண் | நாள் | தலைப்பு | பங்கேற்பாளர்கள் | பயிற்சியாளர் |
|---|---|---|---|---|
| 1 | 16.01.2017 | பஞ்சாயத்துராஜ் | 90 | திரு.இருதய ராஜ் |
| 2 | 09.02.2017 | உதவியாளரின் பெயர் பதிதல் | 96 | திரு ஷாஜன் ஜோசப் திருமதிஸ்வினிதா |
| | 11.03.2017 | துரித உணவுகளால் ஏற்படும் தீமைகள் | 97 | திரு.அலோசியஸ் |
| 3 | 03.05.2017 | வேலை வாய்ப்புகள் | 93 | Grow Centre |
| 4 | 26.07.2017 | வாழ்வியல் முறை | 58 | அருட்சகோதரி செல்வமேரி |
| 5 | 08.07.2017 | குடும்பம் | 49 | அருட்தந்தை ஜோஸ் |
| 6 | 25.08.2017 | மனித நேயம் | 89 | திருமதி.ஆரோக்கிய கில்டா |
| 7 | 09.09.2017 | சிறுதொழில் பயிற்சி (லோஷன், சர்ப்) | 60 | திரு.ஜுலியஸ் பாண்டியன் |
| 8 | 07.10.2017 | கூடை பின்னுதல் | 77 | திருமதி.கீதா |

## அம்மா



மனதில் பூ பூக்கும்..............
மனதின் உள்ளே ஒரு பூ பூத்தது
அந்த பூவின் பெயர் அம்மா!
குழந்தை பிறந்த உடனே அழும்..............
ஆனால் அந்த குழந்தை பேச தொடங்கும் போது
சொல்லும் முதல் வார்த்தை அம்மா!


**J.M. பிளஸ்ஸி ஜான்** வகுப்பு VIII

## என் தாயே !




அ என்னும் அன்பைக் கொண்டு
ஆ என்னும் ஆசையைக் கொண்டு
இ என்னும் இன்பத்தில் வாழ
ஈ என்னும் ஈகை குணத்தை தந்து
உ என்னும் உண்மையாய் வாழ
ஊ என்னும் ஊக்கத்தை அளித்து
எ என்னும் எண்ணத்தை தந்து
ஏ என்னும் ஏக்கத்தை அளித்து
ஐ என்னும் ஐயத்தை நீக்கி
ஒ என்னும் ஒற்றுமையில் வாழ
ஓ என்னும் ஓதலில் சிறக்க வைத்து............
என் தாயே,
தீமையை தவிர்க்க தீவனதொட்டியில் பிறந்த.....
நன்மையை நாட நடுங்கும் குளிரில் தவித்த
என் இயேசுவின் நாமத்திலே
என் தாயே உனக்கு என் - முதல்
வணக்கம்...........அம்மா!
இந்த பிரபஞ்சத்தில்,
என் தாயை மறவாமல் வாழ்த்திடுவேன்
என் உயிர் உள்ளவரை இறைவா!!!


**R.L. அஸ்மிதா**















Ahalya



Anu Vaishali. S.M




Ajin. B





Babisha. B




Rashmi. B.U




Ageethraj. C.R




Celin Riji. T




Akash. D




Ebin Jijo. T




Febin




Ashni. J




Gatlin Jude.J



Rexin John. T



Kadvin Jose. K



Rings Christopher.C




Kinshika. G




Ajisha. M



Ashik. M.S



Milton Majith. M



Vibitha P.K



Rithika. R.K



Abin. S



Abishek. S



Subisha. S



Sharon. S



Sherlin Stephi. M



Sabin. S



Preethi. V



Vineesh. W

## Xth Results - 2016
(Above 400 Marks)




# மிட்ஸ்-தளிர்கள் உலகம் காலண்டர் - 2018

| நிகழ்வுகள் | மிட்ஸ் அலுவலகம், கழுவன்திட்டை | மண்டல அலுவலகம், நாகர்கோவில் |
|---|---|---|
| சிறப்பு பயிற்சி | ஜனவரி 17 புதன் | ஜனவரி 13 சனி |
| சிறப்பு பயிற்சி | பிப்ரவரி 10, சனி | பிப்ரவரி 17, சனி |
| சிறப்பு பயிற்சி | மார்ச் 10, சனி | மார்ச் 17, சனி |
| நன்றி கடிதம் | ஏப்ரல் 2, திங்கள் (மேக்கோடு, சூரியகோடு, கிராத்தூர்) | |
| நன்றி கடிதம் | ஏப்ரல் 4, புதன் (பனச்சமூடு, உண்ணாமலைக்கடை) | |
| நன்றி கடிதம் | ஏப்ரல் 5, வியாழன் (ஆற்றூர், செல்லங்கோணம்) | |
| நன்றி கடிதம் | ஏப்ரல் 6, வெள்ளி (நடைக்காவு, பாலவிளை) | ஏப்ரல் 11, புதன் (பூதப்பாண்டி, மந்தாரம்புதூர், அகஸ்தீஸ்வரம், நாகர்கோவில் 2) |
| நன்றி கடிதம் | ஏப்ரல் 9, திங்கள் (மார்த்தாண்டம், குழித்துறை) | ஏப்ரல் 12, வியாழன் (நாகர்கோவில் 1) |
| 2017-18-ல் 9 மற்றும் 11 வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி | மே 12, சனி | |
| விடுமுறைகால பயிற்சி (வகுப்பு8) | மே 23-25 புதன் - வெள்ளி | |
| கல்வி உதவித்தொகை வழங்குதல் | மே 25 வெள்ளி (அனைவரும்) | |
| சிறப்பு பயிற்சி | ஜுன் 9, சனி | ஜுன் 16, சனி |
| சிறப்பு பயிற்சி | ஜுலை 14, சனி | ஜுலை 21, சனி |
| சிறப்பு பயிற்சி | ஆகஸ்ட் 11, சனி | ஆகஸ்ட் 18, சனி |
| சிறப்பு பயிற்சி | செப்டம்பர் 13, வியாழன் | செப்டம்பர் 15, சனி |
| சிறப்பு பயிற்சி | அக்டோபர் 6, சனி | அக்டோபர் 13, சனி |
| நன்றி கடிதம் | அக்டோபர் 3, புதன் (மேக்கோடு, சூரியகோடு, கிராத்தூர்) | அக்டோபர் 12, வெள்ளி அகஸ்தீஸ்வரம், நாகர்கோவில் 2) |
| நன்றி கடிதம் | அக்டோபர் 4, வியாழன் (பனச்சமூடு, உண்ணாமலைக்கடை) | அக்டோபர் 11, வியாழன் (நாகர்கோவில் 1) |
| நன்றி கடிதம் | அக்டோபர் 5, வெள்ளி (ஆற்றூர், செல்லங்கோணம்) | |
| நன்றி கடிதம் | அக்டோபர் 8, திங்கள் (நடைக்காவு, பாலவிளை) | |
| நன்றி கடிதம் | அக்டோபர் 10, புதன் (மார்த்தாண்டம், குழித்துறை) | |
| ஆஸ்தி (AASTHI) (XII & Outgoing Students) | அக்டோபர் 19, வெள்ளி | |
| குழந்தைகள் தினவிழா | நவம்பர் 10, சனி | நவம்பர் 17, சனி |
| கிறிஸ்மஸ் விழா | டிசம்பர் 8, சனி (அனைவரும்) | |

தொடர்பு: அருட்பணி. பீட்டர் பெனடிக்ட் ராஜன், இயக்குநர் மிட்ஸ்
E-mail : mids.marthandam@gmail.com

Santhom Mtm. Ph : 04651 - 270973